# தமிழர் கருமாதி முறை

(சைவம்)

அ. கு. பாலசுந்தர நாயகர், பி.ஏ., எல்.டி.

# தமிழர்

# கருமாதி முறை

## (சைவம்)

ஆக்கியோர் :

அ. கு. பாலசுந்தர நாயகர், பி. ஏ., எல். டி.,

ஆசிரியர், சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளி, சென்னை

சாது அச்சுக்கூடம்,

இராயப்பேட்டை, சென்னை

1941

உரிமை
ஆக்கியோருடையது

விலை அணா 2

# முன்னுரை

முற்காலத்தில் தமிழர்கள், இறந்தவரது உடலை வீட்டில் நீராட்டி, நல்லாடை உடுத்தி, அலங்கரித்துப் பூசனை செய்து, மயானத்துக்குக் கொண்டுபோய்ப் பூமியில் புதைத்து, அவ்விடத்தில இறந்தவரது தலைமாட்டில் ஒரு கல்லையும் நட்டு, அக்கல்லை இறந்தவரின் உடலாகப் பாவித்துக் காத்து, அதற்கு வாரம், மாதம் அல்லது வருடத்திற்கு ஒரு முறை வழிபாடும் செய்து வந்தார்கள். இறந்தவரை எண்ணி எண்ணி ஏங்கித் துன்புறும் அவரது குடும்பத்தைத் துயரத்திலிருந்து மாற்றுவதற்காக, இறந்தவரது உறவினரும் நெருங்கிய நண்பரும் அவரது வீட்டிற்கு வந்து தங்கியிருந்து, இறந்து 10 நாள் வரையிலும் அவரது சந்ததியாருக்குத் தேறுதல் சொல்லிக் கொண்டே வருவார்கள். பின் ஒரு நாளைக் குறித்து. அந்நாளில் இறந்தவருக்கு இறுதியான சடங்குகளைச் செய்து, அவருடைய சந்ததியினரில் மூத்தவரை இறந்தவருக்குப் பதிலாகக் குடும்ப காரியங்களைத் தலைமை வகித்து நடத்தும்படி நியமிக்க மயானத்திலேயே ஒன்று கூடுவார்கள். அப்போது செய்யும் சடங்குகளுக்குத் தான் கருமாதி என்று பெயர்.

அக்காலத்தில் படமெடுப்பது கிடையாது. எனவே இறந்தவர்பால் உள்ள பாசத்தினுல் அவருக்கு மீண்டும் மீண்டும் பூசனை செய்யவேண்டும் என்று விரும்பும் அவரது சந்ததியினர், உடலைப் புதைத்த இடத்தில ஒரு கலலை நாட்டி, அதற்குப பூசனை செய்து தங்கள் ஆவலைத் தீர்த்துக்கொள்வார்கள். இன்றும் சில தமிழர்கள் இவ்வழக்கத்தைப் பினபற்றி மயானததில் கருமாதி செய்கிருாகள்.

ஆனுல தமிழரில பெரும்பான்மையோர் ஆரியரது வழக்கத்தை மேற்கொண்டு இறந்தவரது உடலை எரித்துவிடுகின்றனர். ஆகவே கல் நாட்டுவதற்கும் மயானத்தில் கூடுவதற்கும் அவசியமின்றி, குளம் அல்லது ஆற்றின கரையிலுள்ள உயர்நத மரத்தடியில் அல்லது ஒரு பூந்தோட்டத்தில் கூடி கருமாதியை இப்போது நடத்துகிருர்கள்.

சை. க. ‡

இம்மாதிரி கருமாதியை நடத்துவோரிடம் இறந்தவரது புகைபபடம் அல்லது வர்ணப் படம் இருந்தால் அதையே வைத்து அலங்கரித்து பூஜிக்கலாம். ஓமம் வளர்த்தல் வேண்டியதே இல்லை. இம்முறையில் நமது நாட்டில் பலர் சுவைத்தே அறியாத நெய், பால், இளநீர், தேன் ஆகிய அரிய பொருள்களை கல்லின்மேல் கொட்டிப் பாழாகும் செயலுக்கு இடமே இல்லை. எனவே இம்முறை சுருக்கமும, நாகரிகமும் அறிவுடைமையும் கொண்ட சீரிய முறையாகும்.

மேற் சொன்னபடி படம் இல்லாதபோது, இறந்தவரைப் போன்று களிமண்ணால் ஒரு பதுமை செய்து அதற்கு வழிபாடு செய்யலாம். தமிழரிடை அதிகமாகப் பழக்கத்தில் இல்லாத காரணத்தால் இம்மாதிரி செய்ய விரும்பாதவர், புகைப்படம் எடுக்கவே தெரியாத காலத்தில் நம் முன்னோர்கள் செய்ததைப் போல ஒரு சிறு கருங்கல்லை எடுத்துவந்து, அதை இறந்தவரது உடலாகப் பாவித்துப் பூசனை செய்யலாம். இதற்காகத்தான் இந்த சடங்குக்கு ' கல்லெடுப்பு ' என்று பெயர் வந்தது.

ஆனால் மேலே கூறியுள்ள சுருக்கமான முறை தமிழரில் பலருக்குப் பிடிக்காது. அவர்களுக்கு உதவியாக சில ஆபாச மற்ற பொருளுடைய சடங்குகளை இந்நூலில் விவரித்திருக்கிறோம். பார்ப்பனப் புரோகிதர் செய்யும் சிற்சில அறிவுக்குப் புறம்பான சடங்குகளை ஆங்காங்கு எடுத்துக் காட்டியுள்ளோம். அவர்களுடைய பேச்சைக் கேட்டுக்கொண்டு, அப்படிச் செய்வதால தங்களுக்குக் கவுரவம் உண்டாகும் என்று நினைத்துத், தமிழர்களில் பணக்காரர்களா யிருப்போர் சிலர் செய்யும், ஒரு பார்ப்பனர் அலலது பார்ப்பனத்தியை இறந்தவராகப் பாவித்து, அவருக்கு விலையுயர்ந்த உடைகளும், பாத்திரங்களும், கன்றையுடைய பசு முதலிய பெருங்கொடைகளும் அளித்து அவரைப் பூசித்தல முதலிய, ஏமாற்றமும் ஆபாசமும் நிறைந்த சடங்குகளைக் கூறாது விடுத்தனம்.

சுருங்கச் சொல்லுமிடத்து, ஒருவர் இறந்த பின் அவரது ஆவியானது இறைவனின் திருவடியை அடைந்துவிடுகிறது என்பது தமிழரின கொள்கை. இறைவனோடு இரண்டறக் கலந்து நிற்கும் உயிருக்குத் தனியாக அபிஷேகம் எதற்கு ? ஆராதனை

னதற்கு ? பிண்டப்பிரசாதம் எதற்கு ? இறைவனது வழிபாட்டுக்கு அவைகள் எவ்வளவு அருத்தமற்றனவோ அவ்வளவும் இறந்தவரின் வழிபாட்டுக்கும் அவைகள் அருத்தம் அற்றவைகள் ஆகும்.

இறந்தவரது உயிர்கள் எலலாம் போய்ச் சேரும் பிதிர் உலகம் என்று ஒரு தனி உலகம் இருப்பதாகக் கருதுவது ஆரியரின் கொள்கை. அங்கே இவ்வுலகத்தை நீத்தவர்களின் உயிர்கள் தனித்து இயங்குவதாக அவர்கள் நம்புகிறார்கள் ; எனவே பார்ப்பனப் புரோகிதர் செய்யும் சடங்குகள் பெரும்பாலும் ஆரியருக்கே உரியன ; தமிழருக்குப் பொருந்தா.

வருடத்திற்கு ஒரு முறை இறந்த நாளில், **திதி** அல்லது **திவசம்** என்று சொல்லப்படும் ஆண்டு நினைவு நாள் வினை ஒன்று நடைபெறுகிறது. அந்நாளில் பாாப்பனப் புரோகிதர்களைக் கொண்டு கருமாதியில் நடந்தவை போன்ற பல சடஙகுகளைச் செய்வது அறிவுடைய செயல் ஆகாது. இறந்தவருடைய படத்தை அலஙகரித்து, அவர்களின் அருமை பெருமைகளைச் சிறிது நேரம் நினைதது அல்லது உடன் இருப்பார்க்குச் சொல்லி வணஙகுவதும், கூடுமானால் அநநாளில் ஏழை எளியவர்களுக்கு சாப்பாடு போடுவதும் சாலச்சிறந்த முறையாகும்.

சென்னை
25—10—41

அ. கு. பாலசுந்தர நாயகர்

# உள்ளுறை

பக்கம்


1. ஆசிரியர் இறை வழிபடல் ... 7
2. திருநீறு அளித்தல் ... 8
3. திருமந்திரம் ஓதுவித்தல் ... 9
4. ஜோதி வழிபாடு ... 9
5. நீத்தார் வழிபாடு (கல் எடுப்பு) ... 12
6. கொடை ... 15
7. கருமத்துக்கு உரியவர் தலைவர் ஆதல் ... 15
8. தலைமைக் கோலக் காட்சி ... 16
9. இறை வழிபாடு ... 17
10. வந்தோர்க்கு உபசரிப்பு ... 17

கருமாதி நடத்தும் போது ஆசிரியருக்கு வேண்டிய பொருள்கள் ... 19

மாதிரி கருமாதி அழைப்பு இதழ் ... 20

# தமிழர்
# கருமாதி முறை
## (சைவம்)

## 1. ஆசிரியர் இறை வழிபடல்

பழந் தமிழர்கள் கருமாதியை மயானத்திலேயே செய்துவந்தார்கள். ஆனால் இக்காலத்தில், கிராமங்களில் உள்ளோர் குளக்கரை, ஆற்றங்கரை முதலிய நீர் நிலைகளின் பக்கத்தில் இருக்கும் அரசமரம் முதலிய உயர்ந்த மரங்களின் கீழே போடப்பட்டுள்ள மேடைகளின் மேல் நடத்துகிறார்கள். பட்டணங்களில் உள்ளவர்கள் தோட்டங்களில் உள்ள கட்டடங்களிலும், இடமில்லாமற்போனால் மரங்களிடையிலும் இக்காரியத்தை நடத்திக்கொள்கிறார்கள்.

ஆசிரியர் வடக்கு நோக்கி உட்காரவேண்டும். உட்கார்ந்தவுடனே இந்நூலின் இறுதியில் 'கருமாதி நடத்தும்போது ஆசிரியருக்கு வேண்டிய பொருள்கள்' என்று குறிக்கப்பட்டவைகளை யெல்லாம் தன்னருகில் வாங்கி வைத்துக்கொண்டு, பின் ஆசிரியர்,

*உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்*
*நிலவு லாவிய நீர்மலி வேணியன்*
*அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்*
*மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.*

—சேக்கிழார்

*அல்லல் என்செயும் அருவினை என்செயும்*
*தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என்செயும்*
*தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனர்க்கு*
*எல்லை இல்லதோர் அடிமை பூண்டேனுக்கே.*

—திருநாவுக்கரசர்

என்ற பாடல்களைப்பாடி இறை வணக்கம் செய்யவேண்டும்.

# 2. திருநீறு அளித்தல்

இவ்வினையின் தொடக்கத்தில் பார்ப்பனப் புரோகிதர் இயற்றும் பிள்ளையார் பூஜை 'ஒன்றே குலமும் ஒருவனே தெய்வமும்' என்ற கோட்பாடுடைய தமிழருக்குப் பொருந்தாதென்றும, நவக்கிரக பூஜை 'சென்று நாம் சிறு தெய்வம் சேர்வோம் அல்லோம், சிவபெருமான் திருவடியே சேரப்பெற்றோம்' என்ற கொள்கையினையுடைய சைவருக்கு ஆகாதெனவும், மற்றும் ஆவினில் ஐந்து, நிறைகுடம், ஆகியவைகளின் வழிபாடும், கருமத்துக்கு உரியவர் பூணூல் அணிவதும் இக்காலத்துத் தமிழரின் தன் மதிப்புக்கும் பகுத்தறிவுக்கும் பொருந்ாதன வென்றும விடுத்தனம்.

அவைகளுக்குப் பதிலாக சைவர்களுக்கு இன்றியமையாதனவான திருநீறு சிவ நாமம் ஆகியவற்றின் சிறப்புக்களை, தன் குடும்பத்தின் தலைவராக வரப்போகும கருமத்துக்கு உரியவருக்கு எடுத்துக்காட்டும் சடங்குகளை இங்குப் புகுத்தி யிருக்கிறோம்.

கருமத்துக்கு உரியவர், சவரம் செய்துகொண்டு, குளித்துவிட்டுச் சுத்தமான உடை தரித்து, நெற்றியில் திருநீறு அணிந்துகொண்டு வந்து கிழக்கு நோக்கி உட்கார வேண்டும்.

ஆசிரியர் திருநீற்றை ஒரு தட்டில் வைத்து, அதில் கொஞ்சம் விரல்களினிடையே எடுத்துக் கொண்டு,

**மந்திரம் ஆவது நீறு வானவர் மேலது நீறு**
**சுந்தரம் ஆவது நீறு துதிக்கப் படுவது நீறு**
**தந்திரம் ஆவது நீறு சமயத்தில் உள்ளது நீறு**
**செந்துவர் வாய்உமை பங்கன் திருவால வாயான் திருநீறே !**

—திருஞானசம்பந்தர்

**என்ற பாட்டைப் பாடிப் பின் உரியவருக்குத் திருநீற்றைக் கொடுத்து அணிந்துகொள்ளச் சொல்லவும்.**

# 3. திருமந்திரம் ஓதுவித்தல்

சைவர் ஒவ்வொருவரும் பரமசிவனுடைய திருநாமத்தை 'சிவசிவ' என்று பன்முறை சொல்லவேண்டுமென்பதும், அப்படிச் சொல்வதனால் உண்டாகும் பயன் இன்னவென்பதும், அறியவேண்டியவ ராதலின், ஆசிரியர்,

*சிவசிவ என்கிலர் தீவினை யாளர்*
*சிவசிவ என்றிடத் தீவினை மாளும்*
*சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்*
*சிவசிவ என்னச் சிவகதி தானே.*

—திருமூலர் திருமந்திரம்

என்ற பாடலை உரியவருக்கு ஓதி, அவரை 'சிவ சிவ' என்று மும்முறை சொல்லும்படிச் செய்யவும். பிறகு,

*அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்*
*அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்*
*அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்*
*அன்பே சிவமாய் அமர்ந்திருப் பாரே.*

—திருமூலர் திருமந்திரம்

என்ற பாடலை உரியவருக்கு ஓதி, அவரை 'அன்பே சிவம்' என்று மும்முறை சொல்லும்படிச் செய்யவேண்டும்.

# 4. ஜோதி வழிபாடு

இது பார்ப்பனப் புரோகிதர் நடத்தும் ஓமம் வளர்த்தலுக்குப் பதிலாகச் செய்வது. உலர்ந்த புல்லையும் சுள்ளிகளையும் போட்டுக் கொளுத்தி, அதில் இந்நாட்டு மக்களில் பலர் சுவைத்தே அறியாத அருமையான நெய்யைக் கொட்டிப் பாழாக்கிப், புகையை உண்டாக்கி, கருமத்துக்கு உரியவர், கருமாதிக்கு வந்திருப்போர் ஆகியவர்களுடைய கண்களுக்குத் தொந்தரவு கொடுப்பதுதான் ஓமம் வளர்த்தலின் பலன். இம்மாதிரி அக்கினி மூட்டி அதைப் பூசிப்பது,

பனியும் குளிரும் அதிகமாயுள்ள மத்திய ஆசியாவில் நாகரிக மற்றவர்களாய் வாழ்ந்திருந்த ஆரியர்களுக்குத் தங்கள் குளிரைப் போக்கிக் கொள்ள மிகப் பொருத்தமானதாய் இருந்தது. மேலும் அவர்கள் அக்காலத்தில் ஆடுமாடுகளை மேய்த்துக் கொண்டு ஊரூராய்த் திரிந்து கொண்டிருந்தபடியால் அவர்களில் ஒவ்வொரு குடும்பத்தினரும் சமையலுக்காக நெருப்பை வெகு ஜாக்கிரதையாக அணைந்து போகாமல்படி எப்போதும் எரியவிட்டுக் கொண்டே இருக்க வேண்டியிருந்தது. எனவே, ஆடு மாடு மேய்த்துப் பிழைத்து வந்த அவர்களுக்கு மிகச் சுலபமாகக் கிடைத்த நெய்யைக் கொண்டு அக்கினியை வளர்த்து, ஆரியர்கள் அக்கினியைத் தெய்வமாகப் போற்றி வந்தார்கள்.

உஷ்ண நாடான தென்னிந்தியாவில், நாகரிகம் வாய்ந்தவர்களாய் ஒரே இடத்தில் தங்கி வசிக்கும் தமிழர்களுக்கு அக்கினி அவ்வளவு அருமையானதல்ல. மேலும் கேவலம் பஞ்ச பூதங்களில் ஒன்றாகிய அக்கினியை இறைவனாகக் கொள்வது பகுத்தறிவுக்கு முரணாகும். ஆகையால் அக்கினி வழிபாட்டைத் தமிழராகிய நாம் செய்தல் பொருந்தாது.

அக்கினியை இறைவனது ஜோதி வடிவமாகப் பாவித்து வழிபாடு செய்ய விரும்பும் தமிழர் சிறிதளவு நெய்யைக் கொண்டு எரிவளர்த்து, கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள பாட்டுக்களையே பாடிப், பூக்களுக்குப் பதிலாக நெய்யை, சுள்ளியின் முனையில் மாவிலையை மடக்கிக் கட்டிச் செய்யப்பட்ட சிறுகரண்டியால் எடுத்து எரியில் சொரிந்து பூசனை செய்யலாம். சமய குரவர்கள் இறைவன் ஜோதி வடிவமானவன் என்றும் பாடியிருக்கின்றனர்.

எரிவளர்த்தலுக்குப் பதிலாக விளக்கின் சுடரையே ஜோதி வடிவமான இறைவனாகப் பாவித்து வழிபாடு செய்வது நாகரிகமான முறையாகும். வள்ளலார் ராமலிங்க சுவாமிகளின் கொள்கையும் இதுவே. இப்படிச் செய்வதற்குக் குத்துவிளக்கு ஒன்றில் பலமுகங்களில் திரிகளைப் போட்டு ஏற்றிவைத்துக் கொள்ளலாம். அதன் முடியில் ஒரு சிறு பூமாலையைச் சுற்றி, அதன் சுடரை ஜோதி வடிவ

12861

*மான இறைவனாகப் பாவித்துக் கைகூப்பித் தொழும்படி உரியவருக்குச் சொல்லி, ஆசிரியர்,*

*சோதியே ! சுடரே ! சூழொளி விளக்கே !*
*சுரிகுழல் பணைமுலை மடந்தை*
*பாதியே ! பரனே ! பால்கொள் வெண் நீற்றாய் !*
*பங்கயத் தயனும் மாலறியா*
*நீதியே ! செல்வத் திருப்பெருந் துறையில்*
*நிறைமலர்க் குருந்தம் மேவியசீர்*
*ஆதியே ! அடியேன் ஆதரித்து அழைத்தால்*
*அதெந்துவே என்றருளாயே !*

—மாணிக்கவாசகர்

*என்ற பாட்டைப் பாடி வணங்கவேண்டும். பிறகு, உதிரிப்பூ வைத்திருக்கும் தட்டை உரியவர் முன் வைத்து, ஒவ்வொரு பூவாக எடுத்து விளக்கின் அடிப்பாகத்தின்மேல் போடும்படிச் சொல்லிவிட்டு, ஆசிரியர்*

*நீரேறு சடைமுடி என்நிமலன் தான்காண்*
*நெற்றிமேல் ஒற்றைக்கண் நிறைவித்தான்காண்*
*வாரேறு வனமுலையாள் பாகத்தான்காண்*
*வளர்மதிசேர் சடையான்காண் மாதேவன்காண்*
*காரேறு முகிலனைய கண்டத்தான்காண்*
*கல்லாலின் கீழ்அறங்கள் சொல்லினான்காண்*
*சீரேறு மணிமாடத் திருவாரூரில்*
*திருமூலத் தானத்துஎம் செல்வன்தானே !*

—திருநாவுக்கரசர்

*எம்பிரான் போற்றி வானத்தவ ரவர்ஏறு போற்றி*
*கொம்பரார் மருங்குல்மங்கைக் கூற ! வெண்ணீற ! போற்றி*
*செம்பிரான் போற்றி தில்லைத் திருச்சிற்றம்பலவ போற்றி*
*உம்பரா போற்றி என்னை ஆளுடை ஒருவ போற்றி.*

—மாணிக்கவாசகர்

*என்ற பாடல்களை, ' காண் ', ' போற்றி ' என்றுவரும் இடங்களில் நிறுத்திப் பாடவேண்டும. பிறகு, ஒருதட்டில் கற்பூரம் ஏற்றி திருவிளக்குக்குச் சுற்றிக் காட்டிக் கீழே வைத்து, உரியவரைக் கைகூப்பித் தொழும்படிச் சொல்லிவிட்டு,*

திருவே ! என்செல்வமே ! தேனே ! வானோர் செழுஞ்சுடரே !
செழுஞ்சுடர் நற்சோதீ ! மிக்க
உருவே என்உறவே ! என்ஊனே ! ஊனின் உள்ளமே !
உள்ளத்தின் உள்ளே நின்ற
கருவே ! என்கற்பகமே ! கண்ணே ! கண்ணின் கருமணியே !
மணியாடு பாவாய் ! காவாய்
அருவாய வல்வினைநோய் அடையா வண்ணம்
ஆவடு தண்துறை உறையும் அமரர் ஏறே !

—திருநாவுக்கரசர்

என்ற பாடலைப்பாடி இவ் வழிபாட்டை முடிக்கவேண்டும்.

## 5. நீத்தார் வழிபாடு

(கல் எடுப்பு)

இது தான் கருமாதியில் இன்றியமையாத முக்கியமான சடங்கு.

இறந்தவரைக் குறிக்க ஒரு கல் வைத்து வழிபாடு செய்வதே போதுமானது. ஆனால் பார்ப்பனப் புரோகிதர் மூன்று சிறு கருங்கல் துண்டுகளை இச்சடங்கில் உபயோகிக்கிறார்கள். இவைகள் இறந்தவரையும் அவரது தகப்பனையும பாட்டனையும் குறிப்பனவாம்; எனவே இறந்தவருக்கே அன்றி, அவரது முன்னோர்களுக்கும் பூசை செய்வதாகப் பாவனை.

இம்மூன்று கற்களையும் கருமாதி காலத்தில் சவரம் பண்ணும் அம்பட்டனே கொண்டுவந்து கொடுப்பான். அக்கற்களை ஓர் அகன்ற தட்டின் மத்தியில் வைத்து நமது நாட்டில் பலர் சுவைத்தே அறியாத பால், தயிர், இளநீர், தேன், எண்ணெய், சீக்காய் முதலிய அரிய பொருள்களால் நீராட்டிப், பின் சந்தனம், திருநீறு, மலர்களால் அலங்கரித்து, அதற்கென பச்சை ஓலையினால் செய்யப்பட்டுள்ள சிறு வீட்டில் அமர்த்தி, அவைகளின் முன்னே தருப்பைப் புல்லின்மேல், பணிச்சவனால் பொங்கி வைக்கப்பட்ட சோற்றினால் செய்த 16 உருண்டைகளை வைத்துப் படைக்கிறார்கள். பின்பு அக்கற்களைத் தட்டில் வைத்து எடுத்துக் கொண்டுபோய் குளத்தில் அல்லது ஆற்றில் விட்டு விடுவது வழக்கம். அப்போதே கருமத்துக்கு உரியவரும் முழுகி

விட்டு, வீட்டிலுள்ள பெண்களும் முழுகுவதற்காகக் " கல் தண்ணீரில் விழுந்து விட்டது" என்று சொல்லி அனுப்பு வார்கள். இதோடு கல்லெடுப்பு முடிவுறும்.

பகுத்தறிவுக்குப் பொருத்தமாகக் கருமாதியைச் செய்ய விரும்புவோர், இறந்தவரின் படம் அல்லது பதுமை ஒன்றை வீட்டிலிருந்து கொண்டுவந்து வைத்து, பூக்களால் அலங்கரித்து, இறந்தவருக்குப் பிரியமான பலகாரங்களைப் படைத்து வழிபாடு செய்து, அப்படையலை ஏழை எளியவர் களுக்குக் கொடுப்பதே நாகரிகமான முறை ஆகும்.

மேற்கூறிய மாதிரி கல்லுக்கோ, கற்களுக்கோ, படத் துக்கோ அல்லது பதுமைக்கோ நீராட்டல், அலங்கரித்தல், படைத்தல், வழிபாடு செய்தல் ஆகியவை நடக்கும்பொழுது கீழ்க் கொடுக்கப்பட்ட பாடல்களை ஆசிரியர் தொடர்ச்சி யாகப் பாடவேண்டும். இப்பாடல்கள் நீராட்டல் முதலிய வினைகளைப் பற்றிய பாடல்கள் அல்ல; ஆயினும் கருமத் துக்கு உரியவர், கருமாதியைக் காண வந்திருப்போர் ஆகிய வர்களுக்கு யாக்கை நிலையாமையை எடுத்துக்காட்டி, அவர் களின் உள்ளத்தை உருக்கித், தீய எண்ணங்களை அகற்றிப், புனித மாக்கி, இறைவன்பால செல்லுமபடிச் செய்ய வல் லவை ஆகையால் இச் சடங்கு நடைபெறும்போது ஓது வதற்குப் பெரிதும தகுதி வாய்ந்தவை ஆகும்.

*ஐயினால் மிடறு அடைப்புண்டு ஆக்கைவிட்டு*
*ஆவியார் போவதுமே அகத்தார் கூடி*
*மையினால் கண்ணெழுதி மாலைசூட்டி*
*மயானத்தில் இடுவதன்முன் மதியம்சூடும்*
*ஐயனார்க்கு ஆளாகி அன்புமிக்கு*
*அகங்குழைந்து மெய்யரும்பி அடிகள்பாதம்*
*கையினால்தொழுமடியார் நெஞ்சினுள்ளே*
*கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே!*

*நினைத்தனைஓர் பொறையிலா உயிர்போம் கூட்டைப்*
*பொருள்என்று மிகஉன்னி மதியால் இந்த*
*அனைத்துலகும் ஆளலாம் என்று பேசும்*
*ஆங்காரம் தவிர் நெஞ்சே! அமரர்க்காக*
*முனைத்துவரு மதில்மூன்றும் பொன்ற அன்று*
*முடுகியவெம் சிலைவளைத்துச் செந்தீ மூழ்க*
*நினைத்தபெரும் கருணையன் நெய்த்தானம் என்று*
*நினையுமா நினைந்தக்கால் உய்யலாமே!*

இடர்கெடுமாறு எண்ணுதியே நெஞ்சே! நீவா
ஈண்டொளிசேர் கங்கைச்சடையாய்! என்றும்
சுடரொளியாய் உள்விளங்கு சோதீ! என்றும்
தூநீறு சேர்ந்திலங்கு தோளா! என்றும்
கடல்விடமது உண்டிருண்ட கண்டா! என்றும்
கலைமான்மறி ஏந்தும் கையா! என்றும்
அடல்விடையாய்! ஆரமுதே! ஆதீ! என்றும்
ஆரூரா! என்றென்றே அலறா நில்லே!

பற்றிநின்ற பாவங்கள் பாற்ற வேண்டில்
பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டில்
சுற்றிநின்ற சூழ்வினைகள் வீழ்க்க வேண்டில்
சொல்லுகேன் கேள்நெஞ்சே! துஞ்சாவண்ணம்
உற்றவரும் உறுதுணையும் நீயே என்றும்
உன்னையல்லால் ஒருதெய்வம் உள்கேன் என்றும்
புற்றரவக் கச்சார்த்த புனிதா என்றும்
பொழில் ஆரூரா என்றே போற்றா நில்லே!-திருநாவுக்கரசர்

பிறகு அரிசிமா அல்லது கோதுமை மாவை ஒரு பாத்திரத்தில் இட்டுத் தண்ணீர் விட்டுப் பிசைந்து, மூன்று உருண்டைகளாக்கி, அவைகளை இறந்தவர், அவரது தகப்பன், பாட்டன் ஆகியவர்களாகப் பாவிக்கும்படி உரியவருக்குப் புரோகிதர் சொல்லுகிறார். பின்பு அப்பிண்டங்களுக்கு (உருண்டைகளுக்கு) அலங்காரம் தூப தீபம் முதலிய ஆராதனைகள் நடைபெறுகின்றன. பிறகு உரியவர் அப்பிண்டங்களில் இரண்டை தன் இரண்டு கைகளிலும் எடுத்துக்கொண்டு அவைகளின்மேல் தேனை விட்டு இரண்டையும் ஒன்றாக ஆக்கிப் பின், மூன்றாவது பிண்டத்தையும் எடுத்துக் கையிலிருக்கும் பெரிய பிண்டத்தோடு சேர்த்து மூன்றையும் ஒன்றாகச் செய்கிறார். இம்மாதிரி செய்வது இறந்தவரை முன்னே அவரது தகப்பனுடன் சேர்த்துப், பின் அவர்களிருவரையும் அவர்களின் முன்னோர்களுடன் சேர்ப்பதாம். பிறகு அப்பெரிய உருண்டையை ஒரு போகணியில் வைத்து எடுத்துக்கொண்டு போய் தண்ணீரில் கரைத்து விடுகிறார்கள்.

இச்சடங்கைச் சிலர் கல்லெடுப்பு நடந்த மறுநாள் செய்கிறார்கள். ஆனால் இது மனிதனின் பகுத்தறிவுக்குச் சிறிதும் பொருந்தாத ஒரு பெரிய ஏமாற்றமாகும்; எனவே இதை நீக்குக.

## 6. கொடை

நீத்தார் வழிபாடு முடிந்தவுடன், உரியவர் குளித்து விட்டு, சுத்தமான உடை தரித்து நெற்றியில் திருநீறு அணிந்துகொண்டு ஆசிரியர் முன் வந்து மணையில் அமர வேண்டும். பிறகு, வாழை இலைகளில் அரிசி, பருப்பு, காய், கறி வகைகளை வைத்து, உண்டானால் வெற்றிலை, பாக்கு, பணமும் வைத்து, முதலில் இவ்வினை நிகழ்ச்சியில் பங்கெடுத்துக்கொண்ட அம்பட்டன், பணிச்சவன் முதலானோர்க்கு வழங்கிப், பிறகு அங்குவந்து கூடியுள்ள ஏழை எளியவர்களுக்கும் வழங்கவேண்டும்.

## 7. கருமத்துக்கு உரியவர் தலைவர் ஆதல்

இந்தச் சடங்கைச் சிலர் சுபஸ்வீகரணம் என்றும் சிலர் கிருஹ ஐக்யம் என்றும் சொல்வார்கள். சிலர் இதை கல் எடுப்பு நடந்த மூன்ருவது நாளில் செய்வார்கள்.

தானம் (கொடை) முடிந்தவுடன் ஆசிரியர் உரியவரை மணையில் இருத்தி அவருடைய பங்காளிகளை அவருடன் வரிசையாக உட்காரும்படிச் சொல்லவும். அப்போது உரியவர் தனது பங்காளிகளின் சம்மதத்துடன் தனது குடும்பத்துக்குத் தலைமை பூண்டதாகக் கருதப்படுவார்.

இப்போது உரியவரின் நெருங்கிய சுற்றத்தார் அந்த நெருக்கத்தின் முறையில் உரியவரையும் அவர் பங்காளிகளையும் வாழ்த்தி ஆடைகளைப் பரிசாக அளிக்கத் தயாராயிருப்பார்கள். அவர்களிடமிருந்து அப்பரிசுகளை ஒவ்வொன்ருய் ஆசிரியர் வாங்கித் தட்டில் வைத்து, பூவும் வெற்றிலைப் பாக்கும் வைத்து உரியவர் கையில கொடுக்க வேண்டும். பிறகு ஆசிரியர், உரியவரையும் பங்காளிகளையும் எழுந்து போய், அவைகளில் சிலவற்றை அணிந்து கொண்டு வரும்படிச் சொல்லவேண்டும்.

## 8. தலைமைக்கோலக் காட்சி

உரியவரும் அவரது பங்காளிகளும் புத்தாடை அணிந்து மீண்டும் சபையில் வந்து உட்கார்ந்தவுடன், ஆசிரியர் உரியவருக்குத் தேறுதல் கூறும் முறையில்,

நன்று நாள்தொறும் நம்வினை போயறும் !
என்றும் இன்பம் தழைக்க இருக்கலாம் !
சென்றுநீர் திருவேட்களத் துள்ளுறை
துன்றுபொற் சடையானைத் தொழுமினே !

துன்பமில்லைத் துயரில்லை ! யாம் இனி
நம்பனுகிய நன்மணி கண்டனுர்
எம்பொனுர் உறை வேட்கள நன்னகர்
இன்பன் சேவடி ஏத்தி இருப்பதே !

—திருநாவுக்கரசர்

என்ற பாடல்களைப் பாடவேண்டும். பின்பு ஆசிரியர் எழுந்து நின்று கையில் மலர்கள் தாங்கி,

மல்குக தில்லை ! வளர்க நம் பத்தர்கள் !
வஞ்சகர் போயகல !
பொன்னின் செய் மண்டபத்துள்ளே
புகுந்து புவனியெல்லாம் விளங்க !
அன்ன நடை மடவாள் உமைகோன்
அடியோமுக் கருள்புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறி தந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே !

—சேந்தனுர்

என்ற பாடலைப் பாடி, அப்பாடலில் கோடிட்டுள்ள சொற்களைச் சொல்லும்போதெல்லாம் தன் கையிலுள்ள மலர்களை அவர்கள் மீது சொரிந்து வாழ்த்தவும்.

பிறகு, இறந்தவரைப் பற்றிய சரம கவிகள் முதலி யன வாசித்தளித்தல், இறந்தவரின் குணாதிசயங்களைப் பற்றிப் புகழ்தல், புதிய தலைவருக்கு அறவுரை எடுத்துக் கூறல் முதலிய சொற்பொழிவுகள் நடைபெறலாம்.

## 9. இறை வழிபாடு

பிறகு ஆசிரியர், தட்டில் கற்பூரம் ஏற்றித் திருவிளக் குக் காட்டி, உரியவரையும் அவருடன் அமர்ந்துள்ள பங் காளிகளையும் கைகூப்பித் தொழும்படிச் சொல்லிவிட்டு,

*பிறிவுஅறியா அன்பர்நின்*
*அருள்பெய்கழல் தாள்இணைக்கீழ்*
*மறிவுஅறியாச் செல்வம் வந்து*
*பெற்றார் ! உன்னை வந்திப்பதோர்*
*நெறிஅறியேன் நின்னையே*
*அறியேன் நின்னையே அறியும்*
*அறிவுஅறியேன் உடையாய் !*
*அடியேன் உன் அடைக்கலமே !*

—மாணிக்கவாசகர்

என்ற பாடலைப் பாடவும்.

## 10. வந்தோர்க்கு உபசரிப்பு

பின்பு ஆசிரியர் ஒரு தட்டில் வெற்றிலைப்பாக்கு சந்த னம் பூக்கள் ஆகியவைகளை வைத்துக் கொண்டுவரச் சொல்லி, முதலில் கோயில், சங்கம், பத்திரிகைகள் முதலிய வைகளுக்கு இக்காரியத்தை முன்னிட்டு ஏதாவது நன் கொடை அளிப்பதாக இருந்தால், அதை வாங்கி அவ்வவற் றிற்கு உரியவர்களுக்குச் சந்தனம், பூக்கள், வெற்றிலைப் பாக்கோடு வழங்கவேண்டும். பிறகு கருமத்துக்கு உரியவ ருக்கும் அவரது பங்காளிகளுக்கும் பரிசுகளை வழங்கினவர்

களுக்குச் சந்தனம், பூக்கள், வெற்றிலைபாக்கு வழங்கி உபசரிக்கவேண்டும். பிறகு வந்திருப்பவர் எல்லாருக்கும் சமத்துவமாய், (அய்யன்மாருக்கு முன்னே, அன்னியருக்குப் பின்னே, நம்மவருக்குக் கடைசியில் என்ற மானக்கேடான முறையைக் கையாளாமல்) மேற்சொன்ன பொருள்களைக் கொடுத்து உபசரிக்கவேண்டும்.

பிறகு ஆசிரியர்,

வாழ்க தமிழ் மொழி !
வாழ்க நல் தமிழர்கள் !
வாழ்க தமிழகம் !
வாழ்க தமிழ்ப் பெரியார் !

என்று வாழ்த்துப் பாடி இவ்வினையை முடிக்கவும். பிறகு எல்லாரும் எழுந்திருந்து உரியவருடன் மனைக்குப் போய், மனைவாயிலில் உரியவருக்கு ஆலஞ்சுற்றிக் கண்ணேறு கழித்தபின், மனைபுகுந்து, அங்கே நடு வீட்டில் அல்லது அலங்கரித்து வைத்துள்ள இறந்தவரின் படத்திற்கு முன்னே சோறும் பழமும் படைத்துப் பூசனை செய்தபின் உரியவரோடு விருந்துண்பது வழக்கம்.

சைவத் தமிழர் கருமாதி முறை முற்றிற்று.

# கருமாதி நடத்தும்போது ஆசிரியருக்கு வேண்டிய பொருள்கள்

இறந்தவரின் படம், பதுமை, ஒரு சிறு கருங்கல் அல்லது 3 கற்கள்
மணை - ஆசிரியருக்கு
திருநீறு - தட்டில்
ஆழ்ந்த தட்டு - 1, சாதாரண தட்டு - 1
பால், தயிர், இளநீர், தேன்
எண்ணெய், சீக்காய்த் தூள்
தண்ணீர் - பெரிய செம்பில
சிறு செம்பு - 1
அறைத்த மஞ்சள், குங்குமம்
பூச்சரங்கள்
பலகாரங்கள்
தேங்காய் - 1
கற்பூரம், சாம்பிராணி
தூபகலசம் அல்லது சிறு தட்டு
உதிரிப் பூக்கள் - தட்டில
வெற்றிலைப் பாக்கு - தட்டில்
குத்துவிளக்கு

ஓமம் வளர்த்துவதா யிருந்தால்,
மணல்
எருமுட்டை
சுள்ளிக் கட்டு
நெய் - கிண்ணத்தில்
மாவிலை

பிண்டம் இடுவதாய் இருந்தால்
வாழை இலை
சிறுபானை
எருமுட்டைகள்
பச்சரிசி ¼ படி
பித்தளை போகணிச்சட்டி

தானம் கொடுப்பதாய் இருந்தால்
வாழை இலைகள்
அரிசி, பருப்பு, பயறு, உப்பு
காய்கறி வகைகள
தயிர், நெய்
சிலலறைக் காசுகள்

---

## மாதிரி கருமாதி அழைப்பு இதழ்

# நீத்தார் வழிபாடு

அன்புள்ள ஐய,

நிகழும் விசு ஆண்டு புரட்டாசித் திங்கள் 17-ம் நாள் (3—10—1941) வெள்ளிக்கிழமை இரவு 8 மணிக்கு இறைவன் திருவடி நீழல் அடைந்த எனது தம்பி எஸ். வேலாயுத நாயகருக்கு, புரட்டாசித் திங்கள் 30-ம் நாள் (16—10—41) வியாழக்கிழமை காலை 8 மணிக்கு திருமயிலைக் கபாலீசுரர் திருக்குளத்தின் தென் கரையில நீத்தார் வழிபாடு நடைபெறும். அவ்வழிபாட்டில் கலந்து கொள்ளும்படித் தங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம் :

தங்கள் அன்பன்,

**எஸ். தருமலிங்க நாயகர்.**

---

தங்கள் வரவை எதிர்பார்க்கும :—

என். நாராயணசாமி நாயகர்.
கே. முருகேச நாயகர்.
எஸ். தக்ஷிணாமூர்த்தி நாயகர்.
பொன்னுசாமி நாயகர்.
எம். ஜெகதீசன்.

இந்நூல் கிடைக்கும் இடம் :—

A. C. பாலசுந்தர நாயகர், B. A., L. T.,

79, அபிபுல்லா சாயபு தெரு,

திருவல்லிக்கேணி, சென்னை